# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

## சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)

## கிரித்தலயிலுள்ள தேசிய வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலைய (NWRTC) உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான நிர்மாணம்

**கடனிலக்கம் - 5792-LK**

**IFB No.: LK-ESCAMP-DWC-CW-72872**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட (ESCAMP) ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கிரித்தலயிலுள்ள தேசிய வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலைய (NWRTC) உத்தேசிக்கப்பட்ட புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான நிர்மாண ஒப்பந்தத்தின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. கிரித்தலயிலுள்ள வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்காக NWRTC இன் உத்தேசிக்கப்பட்டுள்ள புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ESCAMP இன் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். நிர்மாணத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது பெசேவ நீங்கலாக 440 மில்லியன் ரூபாவாகும்.

   இப்பணியின் விபரம் பின்வருமாறு: வரைபடங்கள், விபரக்குறிப்புக்கள், அளவைப்பட்டியல்கள் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவ திட்டம் ஆகியவற்றில் விபரிக்கப்பட்டவாறான பொறிமுறை மற்றும் மின்னியல் வேலைகள் அடங்கலாக NWRTC இன் மூன்று (03) கட்டிடங்களின் சிவில் வேலைகளாகும்.

   நிர்மாணக் காலப்பகுதியானது அண்ணளவாக 365 நாட்களாகும்.

3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   - கட்டிடங்கள் நிர்மாண விஷேடத்துவத்தில் சி-2 அல்லது மேற்பட்ட தரத்தில் முன்பு ICTAD என அழைக்கப்பட்ட CIDA உடன் விலைமனுதாரர் பதிவு பெற்றவராகவிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதி ஆகக் குறைந்தது 700 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP) , செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து (தொலைபேசி இல.: 011-2888427) பெற்று 2018.12.27 ஆம் திகதி வரையும் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் வேலை நாட்களில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

6. 2018.11.21 ஆம் திகதியிலிருந்து 2018.12.27 ஆம் திகதி வரையும் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான அறுபதினாயிரம் ரூபாவைச் (60,000 ரூபா) செலுத்திய பின்னர் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP) , செயற்றிட்ட பணிப்பாளருக்கு (தொலைபேசி இல.: 011-2888427) CIDA பதிவின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது ESCAMP இன் செயற்றிட்ட பணிப்பாளருக்கு ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்பட்டு, ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு ஒரு தபாலுறையில் அடக்கப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் நிர்மாணத் தலைப்பு ஆகியன எழுதப்பட்டு 2018.12.28 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்தின் 8 ஆம் மாடியிலுள்ள மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் தொழில்நுட்ப பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டியிலும் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

8. கிரித்தல NWRTC இல் 2018.11.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். தள பரீட்சித்தலும் அதே நாளில்நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கும் தள பரீட்சித்தலுக்கும் அவர்தம் சொந்த செலவிலேயே சமுகமளிக்கலாம்

9. விலைமனுக்கள் 2019.05.24 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட ''விலைமனுப் பிணையொன்றுடன்'' அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணைத் தொகையானது 5,000,000 ரூபாவென்பதுடன் (ஐந்து மில்லியன் ரூபா) 2019.06.21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

11. தள பரீட்சித்தல்கள் தொடர்பான ஆகுசெலவுகள் மற்றும் செலவினங்கள் அடங்கலான விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் ஆகியன தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு தொழில் வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார்.

12. பெற்றுக் கொள்ளப்பட்ட எந்தவொரு விலைமனுவையும் ஒன்றில் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான முழுமையான உரிமையை அமைச்சு பெறுகைக் குழுவானது கொண்டுள்ளதுடன், இது தொடர்பாக அமைச்சு பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தொழில்நுட்ப பிரிவு,**
**மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,**
**8 ஆம் மாடி, இல.: 500, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு-10.**

**16.11.2018.**

**தொலைபேசி இல.: 011-2684395**